# ஒரு அறிமுகம்

உடன்படிக்கைகளின் கருத்தைப் புரிந்து கொள்ளாமல், ஒருவர் வேதாகமத்தைப் புரிந்து கொள்ள முடியாது, ஏனென்றால் வேதாகமத்தின் செய்தியானது குறிப்பிடத்தக்க அநேக உடன்படிக்கைகளைச் சுற்றியே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கிறிஸ்துவுக்குள் நாம் பெறுகின்ற ஆசீர்வாதங்கள் யாவும் பழங்கால உடன்படிக்கை ஒன்றின் நிறைவேற்றமாகவும், இயேசு நம்மோடு செய்துள்ள நிறைவான உடன்படிக்கையாகவும் உள்ளது.

உடன்படிக்கை என்பது பிணைத்து வைக்கும் ஒரு வாக்குத்தத்தம் அல்லது ஒப்பந்தம் ஆகும். "உடன்படிக்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை(*berith*)யானது "சேர்ந்து அப்பம் புசித்தல்" என்ற அர்த்தம் தரும் *barah* என்ற எபிரெய வார்த்தையிலிருந்து பெறப்பட்டதாகும். இது 'சங்கிலி' என்று அர்த்தம் தரும் *beritu* மற்றும் "இடையில்" என்று அர்த்தம் தரும் *biret* என்ற வார்த்தைகளுடனும் தொடர்பு உள்ளதாயிருக்கின்றது.

நோவா, ஆபிரகாம், தாவீது மற்றும் பல தனிநபர்களுடன் மற்றும் மக்கள், மக்களினங்கள் ஆகியோருடனும் தேவன் உடன்படிக்கை செய்து கொண்டார். அவைகளில், தேவன் இஸ்ரவேலர்களுடன் செய்து கொண்ட பழைய உடன்படிக்கையும், கிறிஸ்தவர்களுடன் அவர் செய்து கொண்டுள்ள புதிய உடன்படிக்கையும் நன்கு அறியப்பட்டவைகள் ஆகும். உடன்படிக்கைகள் சில, அவைகளைத் தேவன் யாருடன் ஏற்படுத்திக் கொண்டாரோ அவர்களுக்கு நேரடியான பலன்களைத் தருவதாயிருந்தன. மற்றவைகளோ, அவர்களுடைய முன்னோர்களுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையினால் அவர்களின் பிந்திய தலைமுறையினருக்கு ஆசீர்வாதங்கள் தருபனவைகளாய் இருந்தன.

தேவன் மட்டும் மனிதர்களோடு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டதோடல்லாமல், மனிதர்களும் ஒருவருக்கொருவர் உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கைகள் பண்புகளில் வேறுபட்டிருந்தாலும், அவைகளில் பெரும்பாலானவைகள் இரண்டு குழுவினருக்கு மத்தியில் சட்டபூர்வமாக கட்டுப்படுத்தும் சில கடமைகளைப் பிணைத்து வைத்தன.

சில உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் சம அந்தஸ்துள்ள ஒரு சாரார் அல்லது இரு சாராராலும் ஒழுங்கு படுத்தப்பட்டு பின்பு இரு சாராராலும் மனம் உவந்து ஏற்றுக்கொள்ளப்பட்டன. வேறொரு வகையான உடன்படிக்கையில் ஒரு சாராரால் வாக்குத்தத்தம் ஒன்று செய்யப்பட்டு, இரண்டாம் சாராருக்கு அதன்மூலம் வரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள எந்த நிபந்தனையுமின்றி அனுமதியளிக்கப்பட்டது.

இரு சாராரும் சம அந்தஸ்துள்ளவர்களாயிராதபோது, உயர்ந்த

அந்தஸ்தில் உள்ளவர் உடன்படிக்கையின் நிபந்தனைகளைத் தாழ்ந்த அந்தஸ்தில் உள்ளவர்மேல் திணிக்க முடிந்தது. இப்படிப்பட்ட உடன் படிக்கைகள் தாழ்ந்த அந்தஸ்தில் உள்ளவர்கள் கீழ்ப்படிய வேண்டியதின் கட்டாயத்தை ஏற்படுத்தியது. இப்படிப்பட்ட உடன்படிக்கைகளைக் காத்துக் கொள்வதால் வரும் ஆசீர்வாதத்தையும், அல்லது உடன் படிக்கையை மீறுவதால் உண்டாகும் தீவிரமான தீய விளைவுகளையும் உள்ளடக்கியிருப்பது வழக்கமாகும்.

உடன்படிக்கையொன்றின் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படும் போது, அவை அநேக வழிமுறைகளில் சட்ட பூர்வமாகக் கட்டுப்படுத்தப் பட்டன. ஒப்பந்தமானது ஆணையிடுதல், உணவைப் பகிர்ந்து கொள்ளுதல், அல்லது உடன்படிக்கையின் அடையாளமாகச் சில பொருட்களைக் கொடுத்தல் ஆகியவற்றின் மூலம் முத்திரையிடப்பட்டது. உடன்படிக்கை யால் கட்டுப்படுத்தப்பட்டவர் ஒரு கற்குவியலை உண்டாக்கவோ அல்லது அடையாளப் பரிசொன்றை அநேகமாக ஒரு சொந்தப் பொருளைக் கொடுக்கவோ முடிந்தது. சில சந்தர்ப்பங்களில், உடன்படிக்கையில் பிரவேசிப்பவர் கூறு போடப்பட்ட விலங்கின் உடல் உறுப்புக்களுக்கு அல்லது பங்கிடப்பட்ட விலங்குகளுக்கு நடுவில் கடந்து போகுதல் போன்ற சடங்கிலும் ஈடுபடுவதுண்டு.

உடன்படிக்கையைப் பிணைத்து வைக்கும் செயலுக்குப் பயன் படுத்தப்பட்டவைகள் அடையாள அர்த்தமுள்ளவைகளாயிருந்தன. உதாரணமாக, உடன்படிக்கையின் நிரந்தரமான இயல்புக்கு அடையாள மாக உப்பு பயன்படுத்தப்பட்டது; உப்பு உணவைப் பாதுகாப்பது போல, உடன்படிக்கையானது பாதுகாக்கப்பட வேண்டும் என்று உணர்த்தப் பட்டது. கூறிடப்பட்ட விலங்கின் உடல் உறுப்புக்களின் நடுவே கடந்து செல்வதானது, உடன்படிக்கையை மீறும் எவரும் அவ்விதமாகவே கூறிடப்படுவார்கள் என்பதை மறைமுகமாய் உணர்த்திற்று. உணவுண்ப தென்பது, உடன்படிக்கையினால் தங்களைப் பிணைத்துக்கொள்ளும் சகோதரர்களுக்குள் நிலவும் நம்பிக்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. உடன்படிக்கைக்கு உறுதிப்பாடாகக் கொடுக்கப்பட்ட பொருள் அல்லது குவித்து வைக்கப்பட்ட கற்குவியலானது அந்த உடன்படிக்கையின் நினைவுச் சின்னமாக இருந்தது. இரத்தம் சிந்தப்படுதல் என்பது உடன்படிக்கையின் அதிக பட்சமான முக்கியத்துவத்தை வலியுறுத்தியது, ஏனென்றால், அந்த உடன்படிக்கையை ஏற்படுத்தச் செலவிட்ட விலைக் கிரயமாக அந்த இரத்தம் கருதப்பட்டது.

வேதாகமத்தை நாம் படிக்கையில், சம அந்தஸ்துள்ள தனிநபர்களுக் குள்ளும், ஒரு நபருக்கும், ஒரு குழு அல்லது இனத்திற்கும் இடையிலும் மற்றும் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட உடன்படிக்கைகளைப் பற்றியும் நாம் பார்ப்போம். மனிதர்கள் தங்களின் சொந்த இருதயங்களில் மற்றும் அவர்கள் தேவனுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை களைப் பார்ப்போம். ஆயினும், தேவன் மக்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகளே வேதாகமத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது. இப்பொழுது நாம், தேவன் தனி நபர்களுடனும், தேர்ந்து

கொண்ட ஒரு மக்களினத்துடனும், நிறைவாக எல்லா மக்களுடனும் ஏற்படுத்திக் கொண்ட குறிப்பான உடன்படிக்கைகளைப் பற்றிய நமது பாடத்திற்குள் நுழைவோம்.